இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 277 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 04 – வியாழக்கிழமை 18 மே 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 277 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 04 - Thursday 18 May 2023 - Madurai 8 Pages ₹ 5.00


## 16 லட்சம் பேர் பயன்பெறுவார்கள்!

# அரசு அலுவலர்கள் - ஆசிரியர்களுக்கு 4% அகவிலைப்படி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



**சென்னை, மே 18 -**

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 38 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 01.04.2023 முதல் 42 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும்பணியில் தங்களை அர்ப்பணித்து செயல்படும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கினை முழுமையாக உணர்ந்துள்ள இந்த அரசு, அவர்களின் நலனை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது. இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, கடந்த அரசு விட்டுச் சென்ற கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமை, கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்ட வருவாய் இழப்பு ஆகியவற்றுக்கு இடையேயும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

**38 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக உயர்வு!**

இந்த வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையான அகவிலைப்படி உயர்வு குறித்து கனிவுடன் பரிசீலித்து, இந்த உயர்வினை 01.04.2023 முதல் செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, தற்போது 38 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 01.04.2023 முதல் 42 சதவீதமாக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். இதனால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இந்த உயர்வால் ஆண்டு ஒன்றிற்கு தமிழ்நாடு அரசுக்கு 2,366.82 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இந்தக் கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

மேலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, எதிர்வரும் காலங்களிலும் ஒன்றிய அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும்போதெல்லாம், உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வைச் செயல்படுத்திடும்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தற்போது 38 சதவீதமாக உள்ள அகவிலைப் படி 01.04.2023 முதல் 42 சதவீதமாக உயர்த்தப் பட்டு வழங்கப்படும். இதனால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இந்த உயர்வால் ஆண்டு ஒன்றிற்கு தமிழ்நாடு அரசுக்கு 2,366.82 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.**

## இஸ்ரோ புதிய செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துகிறது!




புதுடெல்லி, மே18-

இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையம் கடந்த 2018ல் செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் செலுத்தியது. தற்போது 5 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் பழைய செயற்கைக்கோளுக்கு பதிலாக புதிய செயற்கைக் கோளை வருகிற 29ந்தேதி ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்த இஸ்ரோ தயாராகி வருகிறது. இதனை இஸ்ரோ மூத்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்திய பிராந்திய செயற்கைக்கோள் அமைப் பாக ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். விளங்கி வருகிறது. இது 24x7 இயங்கும் தரை நிலையங்களின் வலையமைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் சிவில் நோக்கத்திற்காகவும், உள்நாட்டு தொழில் துறையை ஊக்குவிக்கவும் இந்த செயற்கைக்கோள் ஏவப்படஉள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதற்கேற்றவாறு செயற்கைக் கோளின் நீள் வட்டப்பாதை உருவாக்கப்பட்டு வருகிறது.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ. 360 குறைவு!

சென்னை, மே 18-

தங்கத்தின் விலை ஒருநாள் உயருவதும், மறுநாள் குறைவதுமாக இருந்தது. இந்நிலையில், தங்கம் விலை நேற்று சற்று குறைந்துள்ளது.

அதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 360 குறைந்து ரூ.45,360க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ.5,670க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதைபோல வெள்ளி 60 காசுகள் குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.78.20க்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ வெள்ளி ரூ.78,200க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## வாட்ஸ் அப்பில் மெட்ரோ ரயில் டிக்கெட்டுகள்!



சென்னை, மே 18-

வாட்ஸ் அப்பில் மெட்ரோ ரயில் டிக்கெட் பெறும் வசதியை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிமுகம் செய்ய உள்ளது. செல்ல வேண்டிய இடம், கட்டணத்தை வாட்ஸ்அப் செயலியில் செலுத்தி உடனே டிக்கெட் பெறலாம் என மெட்ரோ நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயிலில் தற்போது டிக்கெட் எடுக்க கவுண்ட்டர் டிக்கெட் வசதியோடு மேலும் 2 வகையான வசதிகள் உள்ளன.

இந்நிலையில் புதிதாக 3வது வசதியை சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் பயணிகளுக்கு வழங்க உள்ளது. இதற்கான திட்டத்தை சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வடிவமைத்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் சென்னை மெட்ரோ ரயிலில் பயணிக்கும் பயணிகள் செல்போனில் உள்ள வாட்ஸ்அப் மூலம் டிக்கெட் எடுத்து எளிமையாக பயணம் செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

## தமிழ்நாட்டில் வெப்பம் அதிகரிக்கும்!

சென்னை, மே 18-

சென்னையின் பல பகுதிகளில் 42 டிகிரி செல்சியசுக்கு மேல் வெப்பம் பதிவாகியுள்ளது. கோடை வெயிலின் தாக்கம் இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் மோக்கா புயல் உருவாகி சில நாட்களுக்கு முன்பு கரையைக் கடந்தது. இதன் காரணமாக அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக உயர்ந்திருக்கிறது. இயல்பைவிட அதிகமாக பதிவாகியுள்ளது.

சென்னை, கரூர், வேலூர், கடலூர், ஈரோடு, நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக பதிவாகியுள்ளது. காற்றில் ஈரப்பதம் குறைந்துள்ள நிலையில்வெயிலின் தாக்கமும் அதிகரித்து வருவதால் வெப்ப அழுத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர் கண்காணிப்புகள் வேண்டும்!

# கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கையில் தீவிரம்!

## ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, மே 18–

விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நிகழ்ந்த கள்ளச்சாராய இறப்புகள் குறித்தும், தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், காவல் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நேற்று (17.5.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள், மாநில அளவில் மதுவிலக்கு தொடர்பாக தகவல் அளிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் 10581 பயன்பாட்டில் உள்ளதை, மக்களிடையே பிரபலப்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உதவி காவல் கண்காணிப்பாளர் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கத்துறை ஆகியோரின் whatsapp எண்களை அறிவித்து, அதன்மூலம் பெறப்படும் புகார்களை கூடுதல் காவல் துறை இயக்குநர் (மதுவிலக்கு அமலாக்கம்) அவர்கள் கண்காணித்து உடனுக்குடன் எடுக்கும் தொடர் நடவடிக்கையை உறுதி செய்திட வேண்டுமென்றும், இது தொடர்பான அறிக்கையை, ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று உள்துறைச் செயலாளரின் மூலம் முதலமைச்சரின் அலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தல்!**

மேலும், கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருள்கள் தடுப்பு சம்பந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட அளவில் ஒவ்வொரு திங்கட்கிழமையும், மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) மாவட்ட மேலாளர் ஆகியோரைக் கொண்டு நடத்திட வேண்டுமென்றும், இது தொடர்பாக, தலைமைச் செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்றும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பொதுமக்களிடையே கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டுமென்றும், இதனை பள்ளிகள், கல்லூரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுயஉதவிக்குழு மகளிரைக் கொண்டு நடத்திட வேண்டுமென்றும்; தொழிற்சாலைகளில். எரிசாராயம் மற்றும் மெத்தனால் பயன்பாட்டைக் கண்காணித்து, அது விஷச் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை, காவல் துறை மற்றும் உதவி ஆணையர் (கலால்) அவர்கள் கண்காணித்திட வேண்டுமென்றும், அதோடு, மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில், கடலோர மற்றும் மலைப் பகுதி மாவட்டங்களில், மாவட்ட அளவிலான மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சிறப்பாகச் செயல்படும் உயரதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

**வாழ்வாதார திட்டங்கள்!**

மேலும், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அந்தத் தொழிலிலிருந்து விடுவித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட அரசின் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் பயன்பெற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்றும், இதனை உள்துறைச் செயலாளர் கண்காணித்திட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

அதோடு, கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருள்களை தொடர்ந்து விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் சட்டத்தில் பாரபட்சமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து ஒவ்வொரு மாதமும், உள்துறைச் செயலாளர் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் தலைமையில் காவல் கண்காணிப்பாளர்களின் மாதாந்திரக் கூட்டம் நடத்தப்பட்டு, காவல் துறையின் செயல்பாடுகளைக் கண்காணித்து, முதலமைச்சர் அலுவலகத்திற்கு அறிக்கை அளித்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்கள்.

காவல் துறை அலுவலர்கள், தங்களது முழு திறமையையும், நீண்ட அனுபவத்தையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பினை பெறும்வகையில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்ஒழுங்கு) கி.சங்கர், மதுவிலக்கு அமலாக்கத் துறை கூடுதல் இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் முனைவர் மா.மதிவாணன், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மேலாண் இயக்குநர் லெ.சுப்பிரமணியன், உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பள்ளி திறக்கும் நாளன்றே மாணவர்களுக்கு பாடநூல்கள்!

## பள்ளிக்கல்வித் துறை உத்தரவு!

சென்னை, மே 18 -

கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் நாளன்றே மாணவர்களுக்கு பாடநூல்கள், நோட்டுகள் வழங்க பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட விநியோக மையங்களில் வைக்கப்பட்டுள்ள, மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொருட்களை முன்கூட்டி பள்ளிகளுக்கு அனுப்பவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. பாடப் புத்தகம் உள்ளிட்டவை வழங்க தேவையான நடவடிக்கை எடுக்க பள்ளி கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான தேர்வுகள் அனைத்தும் நிறைவடைந்து கடந்த மாத இறுதி முதல் மாணவர்களுக்கு கோடை விடு முறை விடப்பட்டுள்ளது.

ஜூன் முதல் வாரத்தில் பள்ளிகள் மீண்டும் திறக் கப்படவுள்ளது. பள்ளி திறக்கும் நாளில் மாண வர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள், இதர பொருட்களை வழங்குவதற்கு பள்ளிக்கல்வித் துறை தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்கனவே அச்சிடப்பட்டு தயாராக உள்ள நோட்டு, புத்தகங்கள் மாவட்டந்தோறும் அனுப்பி வைக்கப்பட்டு அங்கு பாதுகாப்பாக சேமிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் பள்ளிகள் திறக்கும் நாளில் மாணவர்களுக்கான புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் பை போன்ற இதர தேவையான பொருட்களை வழங்குவதற்கு அந்தந்த சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை மூலமாக உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதில், மாவட்ட அளவில் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்கள், இதர பொருட்களை சம்பந்தப்பட்ட பள்ளிக்கு, பள்ளி திறக்கும் நாளுக்கு முன்பாகவே அனுப்பி வைக்கவேண்டும் எனவும் கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் நாளன்றே மாணவர்களுக்கு பாடநூல்கள், நோட்டுகள் வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் உரிய வகையில் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இந்தியாவில் 6 தேசியக் கட்சிகள்!

# 2597 மாநிலக் கட்சிகள்!

## தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, மே 18-

இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகள், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத மாநில கட்சிகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு புது பட்டியல் தயாரிக்கப்படுவது வழக்கம். அதன்படி தற்போது இந்திய தேர்தல் ஆணையம் புதிய பட்டியலை தயாரித்து உள்ளது.

இதன்படி நாட்டில் காங்கிரஸ், பா.ஜனதா, ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மற்றும் தேசிய மக்கள் கட்சி ஆகிய 6 கட்சிகள் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளாக உள்ளன.

இதற்கு முன்பு பதிவு செய்யப்பட்டு முறையாக செயல்படாத கட்சிகள் என 218 மாநிலக்கட்சிகள் அறிவிக்கப்பட்டு உள்ளன. 282 கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 15 கட்சிகள் பழைய பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரி மாநிலத்தைப் பொறுத்தவரை தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் என்.ஆர்.காங்கிரஸ் ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளாக உள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 200 கட்சிகள் உள்பட இந்தியா முழுவதும் 2597 மாநிலக் கட்சிகள் இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.